# 18 மானிடத்திற்கு வழிகாட்டும் செயல்கள்

## பௌத்த நூல்



கௌதம புத்தர் பாளி மொழியில் தர்ம உபதேசம் செய்தார். திரிப்பீடகத்தின் பிரிவுகள்

1. சூத்திரம்
2. ஒழுங்கு
3. தர்மம்

என்பனவாகும். இவற்றில் புத்தரின் நேரடி உபதேசம் அடங்கியுள்ளது.

இதைத் தவிர பௌத்தத்தில் சிறந்த இரு நூல்கள் உள

1) தம்ம பதம்
2) ஜாதக கதை நூல்

## தம்ம பதம்

உலக சமுதாயத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமான மிகச் சிறந்த உபதேசம் நிறைந்த செய்யுளாக தம்ம பதம் விளங்குகின்றது.

## ஜாதக கதை நூல்

புத்த பெருமான் ஞானம் பெறுவதற்காக அரச மரத்தடியில் தியானித்தபோது காலத்தில் அவர் செயற்பட்ட விதமும், நல்ல பண்புகளை மக்களுக்கு காட்டிய முறையும் ஜாதக கதை நூல் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### பௌத்த தர்மத்தின் படிப்பினை

1) துன்பத்திற்கு காரணம் எது?
2) துன்பத்தைப் போக்கல், துன்பத்தை போக்குகின்ற வழிகள், மார்க்கம் எவை?

துன்பத்திலிருந்து விடுபடுவதற்கு தானே முயற்சி செய்து கொள்ள வேண்டும். தனது விடுதலையை தானே பெற்றுக் கொள்ள வேண்டும். இதனை அட்டாங்க மார்க்கத்தைப் பின்பற்றுவதால் அடையலாம்.

## இந்து சமய நூல்



இந்து சமயம் பல்தெய்வங்களின் விசுவாசத்தோடு உருவான ஒரு சமயமாக உள்ளது. சைவ சமயத்தினர் சிவபெருமானை வணங்குவது போன்று வைஷ்ணவர் விஷ்ணு தெய்வத்தை வணங்குகிறார்கள். சிவன் தன் அடியவருக்கு உதவும் வண்ணம் தோன்றி மறைபவர் ஆவார். விஷ்ணு தனது அடியார்க்காக அவதாரம் எடுப்பார். 'பிரம்மம்' குணநலன் அற்றது.

வேதங்கள் நான்காகும்

1) இருக்கு 2) யசுர் 3) சாமம் 4) அதர்வனம்

இவற்றுள் இந்து தர்மம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவ் வேத நூல்களை மேலும் 4 பிரதான பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1) ஸ்தோத்திரம் - கடவுளை தேவாரத்தின் மூலம் வழிபடுதல்
2) பிராக்மம் - மந்திரங்களும் பூஜை வழிபாடுகளும்
3) ஆரணியம் - காடு சென்று தியானம் செய்தல்
4) உபநிடதம் - அருகிலிருந்து உபதேசம் பெறல்

மேற்காணும் அனைத்தையும் உள்ளடக்கி 'இந்து சமயம்' என அடியவர்கள் அழைக்க முற்பட்டுள்ளனர்.

இந்து சமய பக்தர்களின் இறுதி இலக்கு 'பிரம்பத்தோடு' இரண்டறக் கலத்தலாகும். இதற்காக அவர்கள் கடவுளுக்கு அன்பு செலுத்தி தியானத்தில் ஈடுபடுகின்றனர். மனப்பக்குவத்திற்கும், ஈடேற்றத்திற்கும் இறைவனின் அன்பை எதிர்பார்க்கின்றனர். பிறரிடம் அன்பு செலுத்துபவர்களாகவும் அஹிம்சையை கடைபிடிப்பவர்களாகவும் வாழ்வர்.

## இஸ்லாம்



ஒரே இறைவனை விசுவாசிக்கின்ற மதமாக உள்ளது. எல்லாமே அல்லாஹ்வின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியது. அல்லாஹ்வுக்கே இஸ்லாமியர்கள் வழிபாடுகள் செய்கிறார்கள்.

முகமது நபிக்கு வெளிக்காட்டப்பட்ட எல்லா விடயங்களையும் மற்றவர்களுக்குப் போதித்து அவர்களைக் கொண்டு எழுத வைத்துள்ளார். அப்புனித நூல்தான் அல் - குர்ஆன்

முகமது நபியின் உபதேசம் அடக்கப்பட்டுள்ள 'அஸ்ன்னர்' என்னும் வேறொரு நூலும் உள்ளது. இதில் பொதுவாக ஏற்படுகின்ற கேள்விகளுக்கு அல்-குர் ஆனில் பதில் தேடப்படுகின்றது. அதில் பதில் இல்லையெனில் அசுன்னா என்ற நூலிலிலிருந்து பெறுவதற்கு முயற்சிக்கப்படும்.

முழு மனித சமுதாயமும் ஒரு குடும்பம் என்ற எண்ண க்கருவுடைய இஸ்லாமியர் ஒரே தெய்வம் என்ற விசுவாசத்தை உடையவர்கள். நல்ல செயல்களில் ஈடுபட்டால் சுவர்க்கம் கிடைக்கும் என்ற கொள்கையுடையவர்கள். அல்-குர் ஆன் கடவுளின் இறுதிச் செய்தி என கருதுகிறார்கள். அது அராபிய மொழியில் எழுதப்பட்டுள்ளது.

சமய நூல்கள் அனைத்தம் மனிதனுக்கு நல்வழியைக் காட்டுகின்றன. எனவே கிறிஸ்தவர்களாகிய நாங்கள், பிற மதத்தவர்களுடன் ஒன்றுபட்டு, சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப உழைக்க வேண்டும்.

ஒவ்வொரு சமயங்களுக்கிடையிலும் பல்வேறு வேறுபாடுகள் இருக்கும். ஆனால் சகலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி நல்ல பண்புகளைக் கடைபிடித்து ஒற்றுமையுடன் வாழவேண்டும். மக்களுக்கிடையில் பேதங்களை உருவாக்காமல் ஒரே மனதுடன் ஒற்றுமையுடன் ஒரே சகோதரர்கள் போல் வாழ சகல மதங்களும் முயற்சி எடுக்க வேண்டும். சமய நூல்களைக் கற்று அனைத்து மக்களும் ஒருவரையொருவர் மதித்து நடந்தால்தான் ஒற்றுமை சாத்தியமாகும்.

**உங்கள் கவனத்திற்கு**

*கிறிஸ்தவ பிள்ளைகளாகிய நீங்கள் யாவரும் இயேசு கிறிஸ்து காட்டித் தந்த வழியில் சென்று திருவிவிலியத்தில் காணப்படும் கிறிஸ்தவ விழுமியங்களுக்கு முதலிடம் கொடுப்பது அவசியமாகும். அதேவேளையில் பல்வேறு சமயங்களைப் பின்பற்றுபவர்களின் எண்ணங்களையும் பண்புகளையும் படிப்பினைகளையும் அறிந்திருப்பது நன்மையளிக்கும்.*

**செயற்பாடு**

கிறிஸ்தவர்களாகிய நமக்கு பண்டிகைகள் இருப்பது போல் மற்ற மதத்தவர்களுக்கும் சமய விழாக்கள் உள்ளன. உங்கள் வகுப்பிலுள்ள ஏனைய மத நண்பர்களிடமிருந்து அறிந்து கீழ் தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

| **சமய விழாக்கள்** | காலம் | ஏன் கொண்டாடப்படுகின்றது. |
|---|---|---|
| பௌத்தம் | | |
| 1. விசாகம் | | |
| 2. பொசன் பௌர்ணமி தினம் | | |
| 3. எசல போயா தினம் | | |
| **இந்து** | | |
| 1. தைப்பொங்கல் | | |
| 2. நவராத்திரி | | |
| 3. தீபாவளி | | |
| **இஸ்லாம்** | | |
| 1. ரம்சான் | | |
| 2. ஹஜ் | | |